சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி.முத்துமாணிக்கம் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கேரளத்தில் ஜானகி - எம்.ஜி.ஆர். சிலைகளுக்கு முதல்வர் தளபதி தந்த மரியாதையையறிந்த பின்-

எடப்பாடி பழனிசாமி ஜானகி அம்மையாருக்கு விழா எடுப்பது வேடிக்கை!

சென்னை கூட்டத்தில் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேச்சு!

சென்னை, டிச.5-

சென்னை, விருகம்பாக்கத்தில் 127வது வட்டத்தில் வட்ட மாமன்ற உறுப்பினர் பொன். லோகு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு தி.மு.க. தலைமை வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேசியபோது கூறியதாவது:-

ஜானகி அம்மா 1996 மே 19-ல் மரணம். இந்த 28 ஆண்டில் ஒருநாள் கூட செப்டம்பர் 23ம் நாள் பிறந்த நாளையோ. மே 19 நினைவு நாளையோ எடப்பாடி பழனிசாமி கொண்டாடியதில்லை. ஜானகி எம்.ஜி.ஆர், அவ்வை சண்முகம் சாலையில் நூறு கோடி ரூபாய் மதிப்பில் உள்ள கட்டிடத்தை தந்தாரே என்பதற்காகவோ, அ.தி.மு.க. ஒன்றுபட இரட்டை இலை நிலைத்திட ஆதரவு கடிதம் தந்ததற்காகவோ ஒரு நாள் கூட நன்றியாக நடந்ததில்லை.

இந்த ஆண்டு கேரளா சென்ற தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் ஜானகி ராமச்சந்திரன் இல்லம் சென்று அந்தம்மையார் படத்துக்கு மாலை அணிவித்து வந்தார். தி.மு.க.விற்கு பிடிக்காத இயக்கத்தின் சார்பில் முதல்வராக இருந்த ஜானகி அம்மையாரின் இல்லத்திற்கு இன்றைய முதல்வர் தங்கத் தளபதி சென்று வந்துவிட்டார். அ.தி.மு.க.வினர் இதுவரை விழா கொண்டாடவும் இல்லை. ஜானகி அம்மா இல்லம் சென்று வணங்கவும் இல்லை என அ.தி.மு.க. தொண்டன் அழுகுரல் கேட்டு, அவர்களை சமாதானம் செய்திட எடப்பாடி பழனிசாமி ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறார்.

ஜானகி அம்மையார் 1989 தேர்தலில் தமிழாக வாழும் கலைஞரைப் போல் ஆட்சி நடத்துவேன் என்று சொன்னாரே அந்த தலைவருக்கு கடற்கரையில் சமாதி வைக்க மறுத்தவர் தான் இந்த எடப்பாடி பழனிசாமி. ஜானகி அம்மையார் ஆன்மா உங்களை மன்னிக்குமா?.

ஜானகி அம்மா வாழும் போதே ஜெயலலிதா பேசும்போது "எம்.ஜி.ஆரை கொன்றதே ஜானகி அம்மையார்தான். அவர்தான் எம்.ஜி.ஆருக்கு மோரில் விஷம் கொடுத்து கொன்றார்" என்றார்.

இப்படி அபாண்டமாக மாபெரும் பழிசுமத்தியதை தனது வாழ்வின் இறுதிநாள் வரை அதை ஜெயலலிதா மறுக்கவே இல்லை. மன்னிப்பு கேட்கவும் இல்லை. ஆனால் எடப்பாடியோ "எம்.ஜி.ஆர். 1967ல் குண்டடிபட்டு படுக்கையில் இருந்தபோதும், 1984ல் உடல் நலம் குன்றி அமெரிக்காவிலும். அதன்பின் சென்னையிலிருந்த போதும் உடன் இருந்து காத்தார்" என்று கூறியுள்ளார். இதில் எது உண்மை, தங்களது வார்த்தை உண்மை என்றால், எம்.ஜி.ஆரின் மனைவியையே தவறாக பேசிய ஜெயலலிதா படத்தை இனி புறக்கணிப்பீர்களா?.

கமலஹாசன் விழாவில் எங்கள் உயிரிலும் மேலான கலைஞருடன் ஜானகி அம்மையார் அமர்ந்தார் என்பதற்காக, "அண்ணன் எப்போது சாவான். திண்ணை எப்போது காலியாகும் என காத்திருந்தாயா துரோகி" எனக்கூறி "உன்னை பார்த்து இந்த உலகம் சிரிக்கின்றது, உன் செயலைப் பார்த்து உன் நிழலும் வெறுக்கிறது" என அ.தி.மு.க. (ஜெ) தலைமை கழகம் என லட்சக்கணக்கில் போஸ்டர் அடித்து தமிழ்நாடு முழுவதும் ஒட்டினார்கள். அது நியாயமா? அதற்காக ஜெயலலிதாவை நீங்கள் கண்டித்ததாக கணக்கு எடுத்துக் கொள்ளவா?

ஜானகி அம்மையார் மற்றும் எம்.ஜி.ஆர். ஆகியோரின் சிலைக்கு கேரளாவில் எங்களது தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்ததையொட்டி ஜானகி அம்மையாரின் நினைவு வந்து எடப்பாடி பழனிசாமி எப்படியோ ஜானகி அம்மாவிற்கு விழா எடுத்து பெருமைப்படுவதை அ.தி.மு.க. தொண்டனே ரசிக்கவில்லை.

இவ்வாறு கவிஞர் காசி முத்துமாணிக்கம் பேசினார்.

இந்த கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிமணியன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா, க.தனசேகரன், வேளச்சேரி பாஸ்கர், பகுதி செயலாளர்கள் இராஜா, கண்ணன், மா.து. செயலாளர் வாசுகி பாண்டியன், தொகுதி பார்வையாளர் ப. உமா காந்த், பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ். வட்ட செயலாளர் வீ.ர. ராஜா, மு. கோவிந்தராஜன், மைக்கேல். பகுதி பொருளாளர் து. ரஞ்சித் குமார், பொன் சேகர், கோ. வெங்கடேசன், சரவணன், சேட்டு, 3ஜி. சரவணன், பொன். பாஸ்கரன், நல்லேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், உதகை தலையாட்டிமந்து நகராட்சி நடுநிலைப்பள்ளி நிவாரண முகாம்களில், தங்கி உள்ள பொதுமக்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (03.12.2024) நேரில் சென்று, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில், நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை நகர மன்றத் தலைவர் திருமதி.வாணிஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

1200 செவிலியர்கள் பணி நிரந்தரம்!

2163 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, டிச. 5-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் இயங்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் காலியாக உள்ள 1200 நிரந்தர செவிலியர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் பணியாற்றி வந்த செவிலியர்களை காலமுறை ஊதியத்தில் கொண்டுவரப்பட்டு, அவர்களுக்கான பணியிடமாறுதல் கலந்தாய்வு 15.11.2024 மற்றும் 16.11.2024 ஆகிய இரண்டு நாட்கள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் விரும்பிய இடங்களை தேர்வு செய்ததின் அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. மேலும் கொரோனோ காலத்தில் பணியாற்றி பணியிலிருந்து 31.12.2022 அன்று விடுவிக்கப்பட்ட செவிலியர்களில் ஏற்கனவே உயர்நீதிமன்றம் மற்றும் அரசு ஆணைகளின்படி 1412 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான பணிநியமன ஆணை வழங்கப்பட்டது. காத்திருப்பில் உள்ள 963 செவிலியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான பணிநியமன ஆணைகள் என்று ஆக மொத்தம் 2163 செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகள் நேற்று வழங்கப்பட்டது.

பணிநியமன ஆணைகள்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 1947 உதவி மருத்துவர்கள், 1291 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், 1412 ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர்கள், 1418 தற்காலிக செவிலியர்களுக்கு நிரந்தர செவிலியர்கள், 946 மருந்தாளுநர்கள், 127 உணவு பாதுகாப்பு அலுவலர்கள் என்று ஆக மொத்தம் 7141 புதிய பணிநியமன ஆணைகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், சுகாதார அலுவலர் போன்ற பல்வேறு பணியிடங்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு நடத்தப்பட்டு மொத்தம் 1583 புதிய பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தேசிய நலவாழ்வு குழுமம் (NHM) மூலமாக (MLHP (Mid level health provider) செவிலியர் 4848 பேர், சுகாதார ஆய்வுளர் (HI) 2448 பேர், 500 UHC (Universal Health Centre) க்கு MO (Medical Officer) 500 பேர், சுகாதார ஆய்வுளர் (HI) 500 பேர், செவிலியர்கள் 500 பேர், MPHW (Multi purpose health workder) 500 பேர், பல் மருத்துவர்கள்60 பேர், பல் சிகிச்சை உதவியாளர் 60 பேர், மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கம் (District Health Society) மூலமாக செவிலியர்கள் 2300 பேர் என மொத்தம் 11,716 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் மருத்துவத் துறையில் 20,440 நபர்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு நடத்தப்பட்டு புதிய பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

கலந்தாய்வு மற்றும் பதவி உயர்வு

வெளிப்படையான கலந்தாய்வு (Transparency counseling) என்கிற வகையில் பதவி உயர்வு மற்றும் பணியிடமாறுதல் கலந்தாய்வுகளின் மூலம் மருத்துவர்கள் 12,575 பேர், செவிலியர்கள் 9,535 பேர், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் 14,783 பேர் என்று ஆக மொத்தம் 36,893 பேர் பணியிட மாறுதல்கள் பெற்றுள்ளனர். அரசு மருத்துவக்கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களிலிருந்து இணைப் பேராசிரியர்கள் என்கின்ற வகையில் பதவி உயர்வு 296 பேருக்கும், அதேபோல் 2024-25 ஆம் ஆண்டிற்கான 40 துறைகளில் இணைப் பேராசிரியர் பணியிலிருந்து பேராசிரியராக 110 பேருக்கு பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரகத்தின் இணை இயக்குநர் பொறுப்புகளில் இருந்தவர்களுக்கு கூடுதல் இயக்குநர்களாக 4 பேருக்கு வழங்கப்பட்டு அவர்கள் பணியில் இணைந்திருக்கிறார்கள். மேலும் முதன்மை குடிமை மருத்துவர் பணியிடங்களிலிருந்து இணை இயக்குநர்களாக 18 பேர் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். மொத்தம் ஒரு வார காலத்தில் மட்டும் மருத்துவத்துறையில் 428 மருத்துவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.

காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவர் 2553 பேர், கிராம சுகாதார செவிலியர்கள் 2,250 பேர், சுகாதார ஆய்வாளர்கள் 1,066 பேர், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் 798 பேர், இயன்முறையாளர் (Physio therapist) 47 பேர் என்று ஆக மொத்தம் 6,714 பணியிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மருத்துவ அலுவலர்கள் 2553 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதற்கு 23,971 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். மேலும் இந்த விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு தேர்வுகள் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இந்த 23,971 பேருக்கு தேர்வு நடத்துவது என்பது பெரிய நிறுவனங்களால் மட்டுமே முடியும் என்கின்ற வகையில், ஒரு பெரிய நிறுவனத்தோடு பேசி, தேர்வு தேதி அறிவிக்கப்பட்டது. 27.01.2025 அன்று தேர்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த தேர்வு தேதியை முன் கூட்டியே நடத்தி பணியிடங்களை விரைந்து நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய நிலையில், அதற்கேற்றவாறு அந்நிறுவனத்துடன் பேசி 05.01.2025 என்று தேர்வு தேதி மாற்றப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் பிற மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் விட திறன் மிக்க அதிநவீன மையமாக்கப்பட்ட கருவிகள் தமிழ்நாடு மட்டும் தான் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் குறித்து பிற மாநில அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் பெருமையாக கூறியுள்ளனர், தனியார் மருத்துவமனைகளால் கைவிடப்பட்ட நோயாளி பலரை இயல்பு வாழ்க்கைக்கு மாற்றியது அரசு மருத்துவமனைகள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மருத்துவக் கிடங்கு உள்ளது, அனைத்து மருத்துவமனைகளிலும் அனைத்து வகையான மருந்துகள் கையிருப்பில் உள்ளது. தமிழ்நாடு உள்ள 10,914 மருத்துவமனைகளும் இதயம் காப்போம் திட்டத்தின் கீழ் உயிர் காக்கும் முக்கிய நேரமாக கருதப்படும் சமயத்தில் அளிக்கக்கூடிய மருந்துகள் எந்நேரமும் கையிருப்பில் உள்ளது. 2,246 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு கடிக்கு, நாய் கடிக்கு மருந்துகள் உள்ளது. அரசு மருத்துவமனைகள் இது போன்று செயல்படுவதால் தான் உள் நோயாளி மற்றும் வெளி நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர் மரு. சித்ரா, மருத்துவத்துறை உயரலுவலர்கள், மருத்துவ சங்க பிரதிநிதிகள், செவிலியர்கள் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பஹ்ரைனில் - துணை முதல்வர் விழா!

கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பு!

பஹ்ரைன், டிச.5-

பஹ்ரைனில் தி.மு.க இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

இதில் ரவிச்சந்திரன், கருணாநிதி சண்முகம், சுல்தான் இப்ராஹிம், மன்னை முபாரக், மேலப்பூந்தை இஸ்மாயில், மணிவண்ணன், ஆபீத் அலி, சதீஷ் குமார், பிரபா தனபால், குடந்தை ஆரிப், ரீதர் சிவா, முகமது அக்கிம், ராஜசேகர், மஸ்கத்தி ராஜா, முபாரக் அலி, சேகர் ராஜேந்திரன், அக்பர் அலி, ஆரூர் சாகுல் ஹாஜா, சிவா, தக்கலை சாம், ஷராபுதீன், ஆசாத் மைதீன், செல்லப்பா, குளச்சல் ஷபீக், பவுல் டேவிட், ஆழியூர் சாகுல், அசோக் குமார், மன்னை செல்வா, ஃபக்ருதீன், முகமது ஹக்கீம், முகமது இலியாஸ் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிவுறுத்தலின்படி மண்டபம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக செயலாளர் கே.ஜெ.பிரவின் தலைமையில் பாரதிநகர் பேருந்துநிலையத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது, அதனை தொடர்ந்து வாலாந்தரவையில் கழக இருவண்ணக்கொடியேற்றி இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மேலும் செஸ்ட் ஏஞ்சலின் மனவளர்ச்சி குன்றியோர் உறைவிடப்பள்ளியில் மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

மண்டல வாரியாக – கழகத்

தகவல் தொழில்நுட்ப அணி ஆய்வுக் கூட்டம்!

மாநிலச் செயலாளர் - அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

DMK IT WING

கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்கும் மண்டலவாரியாக ஆய்வு கூட்டங்களின் அறிவிப்பு:

வ எண்	மண்டலம்	நாள் / கிழமை	நேரம்	இடம்
1	தஞ்சை	11.12.2024 புதன்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	தஞ்சாவூர்
2	திருச்சி	12.12.2024 வியாழக்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	திருச்சி
3	வேலூர்	14.12.2024 சனிக்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	கிருஷ்ணகிரி
4	மதுரை	17.12.2024 செவ்வாய்க்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	மதுரை
5	நெல்லை	17.12.2024 செவ்வாய்க்கிழமை	மாலை 4.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை	திருநெல்வேலி
6	முகவை	18.12.2024 புதன்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	இராமநாதபுரம்
7	காஞ்சி	20.12.2024 வெள்ளிக்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	திருப்பெரும்புதூர்
8	கோவை	22.12.2024 ஞாயிற்றுக்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	கோயம்பத்தூர்
9	சேலம்	23.12.2024 திங்கள் கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	சேலம்
10	சென்னை	26.12.2024 வியாழக்கிழமை	காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை	மாதவரம்

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா
மாநில செயலாளர்,
கழக தகவல் தொழில்நுட்ப அணி